9. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானத்திலிருந்து வந்த தர்ம தேவதையாகத் தமிழகத்திற்கு பல்வேறு பணிகளை ஆற்றி, இந்த ஆட்சி 100 ஆண்டுக் காலம் நிலைக்கும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் கட்டிலிலே இருந்தபோது அளித்த வாக்குறுதி இன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவராகிய நீங்கள் இரண்டாவது முறையாக இந்தச் சட்டமன்றத்தின் பேரவைத் தலைவராக பணியாற்றும் வாய்ப்பை மாண்புமிகு அம்மா அவர்களால் பெற்றவர். சிறப்பான முறையிலே இந்தச் சட்டமன்றத்தை வழிநடத்திச் செல்கின்ற நல்ல ஆற்றலும், திறமையும் உங்களிடத்திலே இருக்கிறது என்பதை நாங்களும் காணுகிறோம். அதுமட்டுமல்லாமல், உங்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆத்மாவின் ஆசீர்வாதம் உங்களுக்கு இருக்கிறது என்பதைக் காணுகின்ற வகையிலேதான், நீங்கள் வெளியே சென்றாலும், (மேசையைத் தட்டும் ஒலி) 122 சட்டமன்ற உறுப்பினர்களின் வாக்குகளைப் பெற்று, நிலைநாட்டியும் காட்டியிருக்கிறீர்கள். எங்கே எங்களுடைய பேரவைத் தலைவர் என்று, நீங்கள் ஒரு நாள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதற்கு அத்தனைபேரும் கண்ணீர் சிந்தினார்கள். அந்தளவிற்கு எல்லோரையும் கவர்ந்த பேரவைத் தலைவராக நீங்கள் இருக்கிறீர்கள். அதற்காக நான் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், இந்த அரசு நிலைக்கப் போகிறதா? இந்த ஆட்சி நீடிக்கப் போகிறதா? இந்தச் சட்டமன்றம் நடக்கப் போகிறதா? என்று சில பேர் வெளியிலிருந்து கேள்விகளைக் கேட்டார்கள்.

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்][2017 ஜூலை 19

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்த ஆட்சி நிலைக்கும், இன்று மட்டுமல்ல, 100 ஆண்டுக் காலம் நிலைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில், விதி 110–ன்கீழ் அறிவித்திருக்கிற திட்டங்கள் அனைத்தையும் நாடே வியந்து பார்த்துக் கொண்டிருக்கிறது. குடிமராமத்துப் பணிகள் மூலமாக ஏழை மக்கள் பயன்படுத்தும் குளங்கள் மற்றும் ஏரிகளைத் தூர்வாரும் பணிகளைப் பார்க்கும்போது, விவசாயிகள் இந்த ஆட்சியையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் நெஞ்சார வாழ்த்தி கொண்டிருக்கிற காட்சியை இன்றைக்கு நாங்கள் காணுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) தென்னை மரம் வைத்திருக்கும் ஏழை விவசாயிகள் "நீரா பானம்" என்கிற திட்டம் எப்போது எங்களுக்கு கிடைக்கப் போகிறது என்று கேட்டபோது, நீங்கள் கவலைப்படத் தேவையில்லை அள்ளித் தருகிறோம் என்று அள்ளித் தந்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்றத்தில், சிறப்பான முறையில் நாங்கள் ஒருவருக்கொருவர் மிஞ்சியவர் என்ற வகையிலே தங்களுடைய பணிகளை ஆற்றியிருக்கிற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, 122 சட்டமன்ற உறுப்பினர்களும் என்றைக்கும் நாங்கள் 122 பேர்கள் இருக்கின்றோம் என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேரவையில் இன்றல்ல, என்றும் இருப்போம், என்றும் இந்த ஆட்சி நிலைக்கும், பல பேர் நினைப்பது போல் அல்லாமல் இந்த ஆட்சி 100 ஆண்டுக் காலம் நிலைக்கும், நீடிக்கும் என்கிற நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என் சார்பாக நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)–ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

2017 ஜூலை 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–45 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

61. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்)த் துறையின் 10–11–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 109–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

62. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்)த் துறையின் 10–11–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 110–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

63. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்)த் துறையின் 9–3–2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 41–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]